மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# ஐந்தறிவு உயிரினங்களின் ஆற்றாத அன்பு

த. மகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

பரந்துபட்ட இந்நிலவுலகில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்களில் புலவர்கள், பல்வேறு வகைப்பட்ட உயிர்வகைகளும் அவற்றின் வாழ்வியல் அமைப்புகளும் உயிரியல் வல்லுநர்களே வியக்கும்வண்ணம் பாடியுள்ளனர். உயிர் வகைப்பாட்டில், சுழற்சி முறையில் ஒன்றை ஒன்று சார்ந்து வாழவேண்டும் என்பதை அனுபவரீதியாக உணர்ந்து தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். இதனை, தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் உயிரினங்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ளதில் காணமுடிகிறது. உலகில் வாழும் உயிரினங்களைத் தொல்காப்பியர் ஆறுவ கையாகப் பிரித்துக் காட்டியுள்ளதை,

"ஒன்றறி வதுவே உற்றறிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே
ஆறறிவதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

(தொல்.பொருள்.572)

எனும் நூற்பாவால் அறியமுடிகிறது. இவ்வாறு உயிர்களை வகைப்படுத்தும் பொழுது விலங்குகளையும் பறவையையும் பற்றி தொல்காப்பியர்,

"மாவும் புள்ளும் ஐயறிவினவே" (தொல்.1531)

எனும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். இதனால், விலங்குகளும் பறவைகளும் ஐந்தறிவு உடையன என்பது புலனாகும்.

சங்க காலத்தில் வாழ்ந்தத் தமிழ்ப் புலவர்கள் தாங்கள் கண்ட காட்சிகளையும் கேட்டறிந்த செய்திகளையும் கொண்டு, தாம் இயற்றிய பாடல்களில் உயிரினங்களை வைத்துப்

பாடியுள்ளனர். பல்வேறு உயிரனங்கள் பற்றி அவர்கள் தந்துள்ள சொல்லோவியங்கள் சுவைக் களஞ்சியங்களாக மிளிர்கின்றன. இவ்வகையில் விலங்குகள் மற்றும் பறவைகளின் அன்பை பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**அன்பு**

உயிரினங்களின் வாழ்க்கை நலமாகவும், இன்பமாகவும் இருக்க அன்பு தேவைப்படுகிறது. கடவுள் மனிதனுக்கு என்று தனியே அளித்தது அன்பு ஒன்றுதான். இரு உள்ளங்களை இணைக்கும் ஆற்றல் அன்புக்கு உண்டு. இத்தகைய அன்பு ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு மட்டும் அல்ல. ஐந்தறிவு படைத்த விலங்குகள் மற்றும் பறவைகளுக்கும் உண்டு என்பதைச் சங்க இலக்கியம் தெளிவுபடுத்துகின்றது.

**யானையின் அன்பு**

பெண்யானையின் பசியை நீக்கும்பொருட்டு பெரிய துதிக்கையை உடைய ஆண்யானை மெல்லிய கிளைகளை உடைய யாமரத்தின் பட்டையை உரித்து அதன் நீரை பருகச் செய்யும். இதனைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

"பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்" (குறுந்.37: 2-3)

எனும் பாடலடிகளில் வெளிப்படுத்துவதின் மூலம் உணர முடிகிறது. யானைக் கன்றுகள் கலக்கிய சிறிதளவு நீரையும் முதலில் தன் பெண்யானையை உண்ணுமாறு செய்து பின்பு, தானும் உண்ணும் என்பதைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

"துடிஅடிக் கயந்தலை கலங்கிய சின்னீரைப்
பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு" (கலித்.11: 8-9)

எனக் கூறி யானையின் அன்பை வெளிப்படுத்துகிறார்.

நீரின்றி வறண்ட வழியிடத்தில் மென்தலையுடைய இளைய பிடியானையின் வருந்திய பசியைப் போக்கும் பொருட்டுப் பெரிய களிற்றியானை ஓமைமரத்தை முறித்து தள்ளும் என்பதைப் பெருங்கண்ணனார்,

"கயந்தலை மடப்பிடி உயங்கு பசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாற் ஓமை" (நற்.137: 6-7)

எனும் நற்றிணைப் பாடல் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

மலைச்சாரலின் கண், கன்று ஈன்று சிலநாள் கழிந்த மெல்லிய நடையையுடைய இளைய பெண் யானைக்கும் அதன் கன்றுக்கும் பசியைப் போக்கும் பொருட்டுக் களிறு, மூங்கிலின் முற்றாத முளையினைக் கொண்டு வந்து கொடுத்து உண்பிக்கும். இவற்றை கண்ணனார்,

"ஈன்று நாள் உலந்த மெல்நடை மடப்பிடி
கன்று பசி களைஇய பைங்கண்யானை
முற்றா மூங்கில் முளை தருபு ஊட்டும்" (அகம்.85: 6-8)

என்னும் அகநானூற்றுப் பாடலடிகள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். தன் இனத்தைப் பேணிப் பாதுகாத்துப் போற்றும் விரைந்த நடையை உடைய களிறானது, முதலில் மூங்கில்

முளைகளையும் பின்னர் தன் இனம் விரும்பும் தழைகளையும் கொண்டு வந்து கொடுத்து அவற்றை உண்பிக்கும். இதனைக் கபிலர்,

"கிளைபாராட்டும் கடுநடை வயக்களிறு

முளைதருபு ஊட்டி வேண்டுகுளகு அருத்து" (அகம்.85:6-8)

எனக்கூறி, களிறானது தன் இனம் விரும்பும் உணவைக் கொண்டு வந்து கொடுத்து அவற்றைக் காக்கும் தன்மையைப் புலப்படுத்துகிறார்.

**பிடியின் அன்பு**

வாழை ஓங்கி வளர்ந்துள்ள தாழ்ந்த இடத்தை உடைய நீர் வற்றாத குழியில் அகப்பட்டுக் கொண்ட, கடுமையான இயல்புடைய களிற்றியானையின் வருத்தம் நீங்க அதன் பெண்யானை, களிறு ஏறுவதற்காக பெரிய மரத்தினை முறித்துப் போட்டது. இதனை பெருங்குன்றூர் கிழார்,

"வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பில்

படு கடுங்களிற்றின் வருத்தம் சொலிய

பிடிபிடி மறுக்கிய பெருமரப் பூசல்" (அகம்.8:9-11)

எனும் பாடலடிகள் வாயிலாகத் தெரியப்படுத்துகிறார்.

நீண்ட பாலை வழியிடத்தே மென்மையான தலையினை உடைய கன்றினை உடைய பிடியானை, தன் கன்று உண்ண வேண்டித் தான் தழையுணவை உண்ணாது மறுத்தது. இவற்றைச் சீத்தலைச் சாத்தனார்

"கயந்தலைக் குழவிக் கவிஉகிர் மடப்பிடி

குளகுமறுத்து உயங்கிய மருங்குப் பலஉடன்

(அகம்.229:4-5)

எனக்கூறி, பிடிக்குக் கன்றின்மீது உள்ள அன்பை வெளிப்படுத்துகிறார்.

**மானின் அன்பு**

பாலை நில வழியில் உள்ள பருத்த மரத்தின் பட்டையை, அங்குள்ள ஆண்மான் தன் காலால் உதைத்துத் தள்ளி அதனை தன் குட்டி உண்ட பின் எஞ்சியதை தான் உண்டது. மேலும், தனது குட்டிக்கு நிழலாகி நின்று வெம்மையைப் போக்கியது. இவற்றை,

"கவைத் தலை முதுகலை காலினொற்றிப்

...................................................

நின்று வெயில் கழிக்கும் மென்பநம்" (குறுந்.213:3-7)

எனும் அடிகள் விளக்குவதால் மரப்பட்டையின் நீர்ப்பசையைத் தன்குட்டிகளுக்கு முதலில் கொடுத்துப் பின் அங்குள்ள வெம்மையைப் போக்க குட்டிகளுக்கு நிழலாகவும் நின்ற ஆண்மானின் அன்பு கண்முன் காட்சியாகத் தோன்றுகிறது.

பாலைநிலக் காட்டுப்பகுதியில் இனிய நிழல் இல்லாததால் வருந்திய தன் பெண்மானுக்குத் தான் நின்று தனது நிழலினைத் தந்து உயிரைக் காக்கும் என்பதைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

"இன்நிழல் இன்மையின் வருந்திய மடப்பிணைக்குத்

தன்நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை" (கலித்.11:16-17)

எனும் அடிகள் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

கார்காலத்தில், பிணைமான் நீங்கிப்பெயரும் களர்நிலத்தில் மருண்டு விழிக்கும் கண்களை உடைய தன் குட்டியொடு தன் கூட்டத்தில் இருந்து தவறி விலகி ஓடும். ஆதனால் பிரிவு துன்பத்தைத் தாங்காத ஆண்மான், தன் துணையையும் குட்டியையும் தேடிச் செல்கின்றது. இதனை,

"கழிப் பெயர் களரில் போகிய மடமான்

வழிக்கட் பேதையொடு இனன் இரிந்து ஓட

காமர் நெஞ்சமொடு அகலா

தேடூஉ நின்ற இரலை ஏறே" (நற்.242:7-10)

என நற்றிணை குறிப்பிடுவதால் விளங்கும்.

நீரற்ற பாலை நிலத்தில் திரண்ட காலினையுடைய பெண்மானின் வெப்பத்தைத் தணிப்பதற்காக அதன் ஆண்மான், பெண்மானின் முதுகினை நக்கும். இதனைக் குடவாயிற் கீரத்தனார்,

"கணைக்கால் அம்பினை ஏறுபுறம் நக்க" (அகம்.287:10)

எனும் அடியால் தெரியப்படுத்துகிறார்.

**புலியின் அன்பு**

அசைந்தாடும் மூங்கில்கள் ஒலிக்கும் மலைப்பகுதியில் கருவுற்று இருக்கும் பெண்புலியின் வேட்கை மிகுந்த பசியினைப் போக்க, சினம் மிக்க ஆண்புலி பெரிய ஆண்பன்றியினைக் கொன்றது. இதனை,

"ஈர்உயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய

இருங்களிறு அட்ட பெருஞ்சின் உழுவை" (நற்.332:6-7)

எனக் குறிப்பிடுவதால், ஆண்புலி தன் துணைமீது கொண்டுள்ள அன்பு புலப்படுகிறது.

பெண்புலியானது உயர்ந்த மலையின் பக்கத்தில் வளைந்த நகத்தினை உடைய குட்டிகள் மூன்றினை ஒருசேரப் பெற்றெடுத்தது. அதனால், வலுவிழந்து போன பெண்புலியின் பசியைப் போக்கக் கருதி ஆண்புலியானது அறல்பட்ட கொம்பினை உடைய ஆண்மானின் குரலினைக் கூர்ந்து கேட்கும். இதனை ஔவையார்,

"ஊன்பொதி அவிழாக் கோட்டு உகிர்க் குருளை

அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்" (அகம்.147:3-7)

எனும் அடிகள் வாயிலாக விளக்குவதால், பெண்புலி ஒரே நேரத்தில் மூன்று குட்டிகளை ஈன்றெடுக்கும் இயல்பும் பெண்புலியின் பசியைப் போக்க ஆண்மானை வேட்டையாடக் காத்திருக்கும் ஆண்புலியின் அன்பும் வெளிப்படுகிறது.

குறுங்காட்டில் வேட்கையுடன் உண்ணாது கிடந்த பெண்புலியின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு ஆண்புலியானது, பெரிய கொம்பினை உடைய களிற்று யானையை தன் வலப்பக்கம் விழுமாறு அடித்துக் கொன்றது. இதனை,

"உண்ணாப் பிணவின் உயக்கம் தீரிய
தடமருப்பு யானை வலம்படத் தொலைச்சி" (அகம்.357:3-4)

என அகநானூறு எடுத்து இயம்புகின்றது. வெண்மையான கொம்புகளை உடைய களிறானது ஆண்புலியைப் பாய்ந்து குத்தியதால் புண் ஏற்பட்டுக் கற்குகையின் உள்ளே ஒடுங்கிக் கிடக்க, பிரிய மணம் இல்லாத பெண்புலி அதனைக் காவல் காத்திருந்தது. இதனை,

"வெண்கோட்டு யானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியம் கல்அளைச் செறிய
முருக்கு அரும்பு அன்ன வள்உகிர் வயப்பிணவு
கடிகொள" (அகம்.362:3-6)

எனும் அடிகள் தெரியப்படுத்துகின்றன. இவ்வாறு குறிப்பிடுவதால், ஆண்புலி பெண்புலி மீது கொண்டுள்ள அன்பும், பெண்புலி ஆண்புலி மீது கொண்ட அன்பும் புலப்படுகின்றன.

### குரங்கின் அன்பு

கூரிய கண்ணையும் தாவுதலையும் உடைய ஆண்குரங்கு இறந்ததை அறிந்து பெண் குரங்கு, பிரிவு துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் மரமேறுதல் முதலிய தம் தொழிலைக் கற்றுக் கொள்ளாத தன் குட்டிகளைத் தன் சுற்றத்திடம் ஒப்படைத்து ஓங்கிய மலைப் பக்கத்தில் தாவிக் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டது. இதனை,

"கருங்கட்டாக் கலைபெரும் பிறிதுற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்கு வரை யடுக்கத்துப் பாய்ந்து உயிர்" (குறுந்.69: 1-4)

என்னும் பாடலடிகள் வெளிப்படுத்துவதால் பெண்குரங்கின் அன்பும் கற்பும் தெரியவருகிறது. உயர்ந்த மலைப்பகுதியில் உள்ள மரத்தின் மீது ஆண்குரங்கு ஏறி, அதில் உள்ள முதிர்ந்த இனிய பழங்களை உதிர்த்து பெண் குரங்கையும் குட்டிகளையும் உண்ண வைத்து அவற்றின் பசியைப் போக்குகின்றது. இதனை,

"........................................கடுவன்
ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந்தோரே" (குறுந்.278:4-7)

எனும் அடிகள் விளக்குகின்றன. ஆண்குரங்கு தன் துணை மற்றும் குட்டிகளின் பசியை போக்கும் தன்மை வெளிப்படுகிறது.

**பசுவின் அன்பு**

புலியிடம் அகப்பட்டுக்கொண்ட மானின் கன்றுக்கு, சினம் இல்லாத முதிய கறவைப் பசு தன் கன்று என எண்ணித் தன் பாலைக் கொடுத்தது. இதனை,

"புலிப்பாற் பட்ட ஆமான் குழவிக்குச்
சினங்கழி மூதாக் கன்று மடுத்து ஊட்டும்" (புறம்.328:1-2)

எனும் அடிகள் குறிப்பிடுவதால் தன் கன்றைத் தவிர மற்றவைக்குப் பால் தராத பசு, சினம் இல்லாமல் மான் கன்றுக்குத் தன் பாலைக் கொடுத்த பசுவின் அன்பு புலப்படுகிறது. முல்லை நிலப் பகுதியில் இருக்கும் பால்தரும் பசுக்கூட்டங்கள், கயிறுகளில் கட்டப்பட்டு இருக்கும் கன்றுகளை நினைத்து தத்தம் வீடுகளை நோக்கிச் செல்கின்றன. இதனை,

"தாம்பு அசை குழலிவீங்கு சுரை மடிய
.................................................................
மனை மனைப் படரும் நனை நகுமாலை" (அகம்.54:7-12)

எனும் அடிகள் குறிப்பிடுவதால் பசுமாடுகள் மாலை நேரத்தில் தன் கன்றுகளுக்குப் பால் கொடுக்கும் பொருட்டு வீட்டை நோக்கிச் செல்கின்றன என்பதை அறிய முடிகிறது.

வயலில் அரிச்சூட்டோடு புதிதாகக் கொண்டு வந்து போடப்பட்ட வெள்ளை நிற ஆம்பல் மலரைக் கன்று ஈன்ற பசு உண்டு எஞ்சியதை, உழுதுவிட்டு ஓய்ந்த நடையை உடைய எருது உண்ணும் என்பதை மருதன் இளநாகனார்,

"வயல் வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில்
ஓய்நடை முது பகடு ஆரும்" (நற்.290:1-3)

எனும் பாடலடிகளால், எருது பசுவின் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறார்.

**அன்னம்**

பல நிறங்களை உடைய மலர்கள் நிறைந்த நீர்நிலையின்கண் ஆண் அன்னத்துடன் பெண் அன்னம் விளையாடும் பொழுது, ஆண் அன்னத்தைத் தாமரை இலை மறைக்க அதனைக் காணாமல் பெண் அன்னம் மனம் கலங்கியதை,

"மணி நிற மலர்ப் பொய்கை மகிழ்ந்து ஆடும் அன்னம் தன்
அணிமிகு சேவல் அகல்அடை மறைத்தென
காதுமென காணாது கலங்கி அம்மடப்பெடை" (கலித்.70:1-3)

எனும் கலித்தொகை பாடலடிகள் வெளிப்படுத்துவதால், அன்னப் பறவைகளின் பாசத்தை அறிய முடிகிறது.

**சிறுவெண்காக்கை**

சிறுவெண்காக்கை கழியிடத்தில் உள்ள இரையாகிய இறாமீனைத் துழாவி எடுத்து தன் துணையை அழைத்து உண்ணக் கொடுப்பதை,

"சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை
பாய் இரும் பனிக்கழி துழைஇ பைங்கால்
தான் வீழ் பெடைக்குப் பயிரிடூஉ சுரக்கும்" (நற்.31:2-4)

எனும் பாடலடிகள் விளக்குவதால், சிறுவெண் காக்கையின் அன்பினை அறிய முடிகிறது.

**நாரை**

வளைந்த வாயுடைய பெடை நாரை, நிறைந்த சூலினால் ஏற்பட்ட வருத்தத்தால் இங்காது நெய்தல் நிலத்தை விடுத்து மருத நிலத்தில் தங்கியிருக்கும். அந்நாரைக்கு முடமுதிர்ந்த ஆண் நாரை கடலில் உள்ள மீனைக் கொண்டு போய்க் கொடுப்பதை இளவெயினனார்,

"கடுஞ்சூல் வயவொடு கானல் எய்தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்" (நற்.263:5-7)

எனும் பாடலடிகள் வாயிலாக வெளிப்படுத்துவதால், நாரை தன் துணையின் மீது கொண்ட அன்பு புலப்படுகிறது.

**நிறைவுரை**

இறைவன் படைத்த இவ்வுலகத்தில் உயிரினங்கள் தன் மனத்துக்குப் பிடித்த பிற உயிரினங்களின் மீது அன்பை செலுத்தி மகிழ்வுடன் வாழ்ந்திருப்பதை இன்று கண்கூடாக கண்டுவருகிறோம். ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த விலங்குகள் மற்றும் பறவைகள்கூடத் தன்னை சார்ந்தவைகளிடம் அன்பை வெளிப்படுத்தி வாழ்ந்திருக்கின்றன என்பதைச் சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களின் வாயிலாகத் தெரியப்படுத்தியுள்ளதை இக்கட்டுரை விளக்கியுள்ளது

**துணைநின்ற நூல்கள்**

1. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்.
2. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்.
3. இரா.பிரேமா, சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும்.